Prot. No. 0620/2026

சுற்றறிக்கை

அக்டோபர் மாதத்தை திருத்தொண்டுப்பணி மாதமாக கொண்டாடுதல்

சீரோ-மலபார் திருச்சபையின் தலைமைப் பேராயர் மார் ரா.ஃ.பேல் தட்டில், தனது உடன் பணியாளர்களான பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் குருக்களுக்கும் துறவிகளுக்கும் தன் ஆயர் பணிப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து இறைமக்களுக்கும் எழுதுவது.

ஆண்டவரின் அருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

ஈசோ மெசியாவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

உலகளாவிய கத்தோலிக்கத் திருச்சபையில் திருத்தொண்டுப்பணி ஞாயிறைக் (Mission Sunday) கொண்டாடும் வழக்கத்தை திருத்தந்தை பதினொன்றாம் பயஸ் முதன்முதலில் தொடங்கி வைத்தார். திருச்சபையின் திருத்தொண்டுப்பணிப் பொறுப்பைக் குறித்த விழிப்புணர்வை இறைமக்களிடையே வளர்ப்பதற்கும், திருத்தொண்டுப்பணிச் செயல்பாடுகளுக்காக ஜெபத்தையும் நிதி உதவியையும் ஊக்குவிப்பதற்குமாக, 1926-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தைய ஞாயிறை ‘திருத்தொண்டுப்பணி ஞாயிறாக’ கடைபிடிக்க திருத்தந்தை பணித்தார். 1926-இல் அவர் வெளியிட்ட 'Rerum Ecclesiae' எனும் சுற்றறிக்கை வாயிலாக, திருத்தொண்டுப்பணிகளின் வளர்ச்சிக்கும் திருச்சபையின் விரிவாக்கத்திற்கும் அவர் முக்கியத்துவம் அளித்தார். அன்று முதன்முதலாகக் கொண்டாடப்பட்ட திருத்தொண்டுப்பணி ஞாயிறு, திருச்சபையின் அகில உலக திருத்தொண்டுப்பணிப் பொறுப்பில் அனைத்து இறைமக்களும் பங்காளிகள் என்பதை நினைவூட்டும் ஓர் விழாவாக இன்று வளர்ந்துள்ளது.

அகில உலகத் திருச்சபையோடு சேர்ந்து அக்டோபர் மாதத்தில் திருத்தொண்டுப்பணி ஞாயிறைக் கொண்டாடுவதோடு மட்டுமல்லாமல், 2016-ஆம் ஆண்டு முதல் ஜனவரி மாதத்தின் தெனஹா (திருக்காட்சியளிப்பு) திருநாள் முதல் 12-ஆம் தேதி வரையிலான நாட்களை, சீரோ மலபார் திருச்சபையில் மறைபரப்புபணி ஆர்வத்தை வளர்ப்பதற்காக “ திருத்தொண்டுப்பணி வாரமாக“ (Mission Week) நாம் கடைபிடித்து வந்தோம். பல்வேறு காரணங்களால் இது எதிர்பார்த்த பலனைத் தராததால், 2024-இல் பாலாவில் நடைபெற்ற ஆயர் பேரவைக் கூட்டத்தின் பரிந்துரைப்படி, ஜனவரி மாத திருத்தொண்டுப்பணி வாரத்திற்கு பதிலாக அக்டோபர் மாதம் முழுவதையும் திருத்தொண்டுப்பணி மாதமாக கடைபிடிக்க சீரோ-மலபார் திருச்சபையின் ஆயர் பேரவை (Synod) தீர்மானித்துள்ளது. அதன்படி, 2026-ம் ஆண்டு முதல் அக்டோபர் மாதம் சீரோ-மலபார் திருச்சபையில் திருத்தொண்டுப்பணி மாதமாக கடைபிடிக்கப்படுகிறது. திருத்தொண்டுப்பணி மாத நிகழ்வுகள் தொடர்பான அனைத்து செயல்பாடுகளையும் ஒருங்கிணைக்கும் மையமாக காக்கநாடு, மவுண்ட் செயிண்ட் தாமஸில் இயங்கும் சீரோ-மலபார் திருத்தொண்டுப்பணி அலுவலகம் (Syro-Malabar Mission Office) செயல்படும்.

திருச்சபை தன் இயல்பினாலேயே திருத்தொண்டுப்பணித் தன்மை கொண்டது என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் நமக்கு நினைவூட்டுகிறது. நற்செய்தி அறிவிப்பு என்பது திருச்சபையின் முக்கியப் பணி மட்டுமல்ல, அதுவே அதன் அடையாளமாக உள்ளது. திருச்சபை நிலவுவதே நற்செய்தி பறைசாற்றவே (Evangelii Nuntiandi, 14, 16). எனவே, திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு இறைமக்களும் திருச்சபையின் திருத்தொண்டுப்பணிப் பொறுப்பில் பங்காளிகளாக மாற அழைக்கப்பட்டிருக்கிறார்கள். நற்செய்திக்காகத் தங்கள் வாழ்வை அர்ப்பணித்து, உலகின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றும் ஆயர்கள், குருக்கள், துறவிகள், மற்றும் பொதுநிலைப் பணியாளர்கள் ஆகியோரையும் அவர்களின் சேவைகளையும் நன்றியுடன் இவ்வேளையில் நாம் நினைவுகூர்வோம். திருத்தொண்டுப்பணிக்களுக்காக சாதகமற்ற சூழ்நிலைகள் அதிகரித்து வரும் இக்காலக்கட்டத்திலும், ஆண்டவராகிய ஈசோ மெசியா நம்மிடம் ஒப்படைத்த

திருத்தொண்டுப்பணி பொறுப்பில் நாம் எந்தக் குறைபாடும் வராமல் பார்ப்பது நமது கடமையாக உள்ளது.

தொடக்க காலங்களில் பிற திருச்சபைகளிலிருந்து வந்த திருத்தொண்டுப்பணியாளர்கள் நம்மை நம்பிக்கையில் வளர உதவியதை நன்றியுடன் நினைவுகூர்வோம். படிப்படியாக, நமது திருச்சபையில் ஏராளமான குருத்துவ, துறவற இறைஅழைத்தல்கள் உருவாகி, நமது குருக்களும் துறவிகளும் இந்தியாவிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நற்செய்தி அறிவிப்புக்காகவும் சமூக சேவைக்காகவும் திருத்தொண்டுப்பணி ஆவலோடும், தூய ஆவியாரின் ஆற்றலோடும் புறப்பட்டுச் சென்றார்கள் அதற்காக நாம் கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். அதேபோல, இந்தியாவிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பல மறைமாவட்டங்களிலும் துறவற சபைகளிலும் இணைந்து ஆண்டவரின் நற்செய்தியை அறிவிக்கும் சீரோ-மலபார் திருச்சபையின் மக்களான ஆயர்களும், குருக்களும், துறவிகளும் நமது திருச்சபைக்கு பெருமை சேர்க்கின்றனர். மேலும், நற்செய்தி அறிவிப்பில் ஈடுபட்டுள்ள பொதுநிலை இயக்கங்களிலும் சீரோ-மலபார் திருச்சபை உறுப்பினர்கள் தீவிரமாகப் பங்காற்றி வருகிறார்கள் என்பதும் குறிப்பிடதக்கது. இந்த திருத்தொண்டுப்பணி நமது கடமையே என்பதை நினைவில் கொள்வோம்.

நாம் தொடங்கும் திருத்தொண்டுப்பணி மாத கொண்டாட்டம், நற்செய்தி அறிவிப்பு மற்றும் திருத்தொண்டுப்பணிச் செயல்பாடுகளின் பல்வேறு தளங்களை அறிந்து கொள்ளவும், புரிந்துகொள்ளவும், ஆதரவளிக்கவும் மறைமாவட்டங்கள், பங்குகள், குடும்பங்கள் மற்றும் தனிநபர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மாதத்தின் நான்கு வாரங்களில் நான்கு விதத்திலான திருத்தொண்டுப்பணிச் செயல்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன:

* முதல் வாரம்: உலகளாவிய திருத்தொண்டுப்பணிச் செயல்பாடுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் அவற்றை அறிமுகப்படுத்துவதற்கும் முயற்சிக்க வேண்டும்.

* இரண்டாம் வாரம்: சீரோ-மலபார் திருச்சபையின் திருத்தொண்டுப்பணிச் செயல்பாடுகளைக் கற்பதற்கும், அவற்றில் பங்கெடுப்பதற்கான வழிகளைக் கண்டறிவதற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

* மூன்றாம் வாரம்: அந்தந்த மறைமாவட்டங்கள் ஏற்றுக்கொண்டுள்ள திருத்தொண்டுப்பணிச் செயல்பாடுகளை அறிமுகப்படுத்தி, அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

* நான்காம் வாரம்: ஒவ்வொரு பங்கின் மற்றும் விசுவாசியின் திருத்தொண்டுப்பணிப் பொறுப்பை உணர்ந்து கொள்ளவும், பங்குத் தளத்தில் பல்வேறு திருத்தொண்டுப்பணிச் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும் சிறப்புச் கவனம் செலுத்த வேண்டும்.

இத்துடன், திருத்தொண்டுப்பணி மாதம் முழுவதும் பங்குகள், உறவியங்கள் மற்றும் குடும்பங்களில் திருத்தொண்டுப்பணிக்காக சிறப்பாக ஜெபிக்க வேண்டும். ஜெபமாலையிலும் திருப்பலி ஜெபங்களிலும் உலகம் முழுவதும் பணியாற்றும் திருத்தொண்டுப்பணியாளர்களையும், நம்பிக்கைக்காக துன்புறுத்தல்களையும் இறைப்பையும் ஏற்றுக்கொள்பவர்களையும் சிறப்பாக நினைவுகூர வேண்டும். ஞாயிற்றுக்கிழமை மறைவுரை, மறைக்கல்வி வகுப்புகள், மறைபரப்புபணி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், “மிஷன் வினாடி வினா” (Mission Quiz) போட்டி, திருத்தொண்டுப்பணி நாடகங்கள் (Mission Skits), குறும்படங்கள் போன்றவை சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களிடையே திருத்தொண்டுப்பணி ஆர்வத்தை வளர்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். குறிப்பாக, புதிய நற்செய்தி அறிவிப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பொதுநிலை நம்பிக்கையாளர்களை மறைமாவட்ட அளவில் கண்டறிந்து ஒருங்கிணைப்பதும், திருத்தொண்டுப்பணியாளர்களை ஊக்கப்படுத்தி கௌரவிப்பதும் மிகவும் உகந்த செயலாகும்.

நமது திருச்சபையில் “ஜீவன் ஜோதி“ என்ற பெயரில் ஓர் அதிகாரப்பூர்வ பொதுநிலை மறைபரப்புபணி இயக்கம் தொடங்கப்பட்டதைப் பற்றி ஏற்கனவே எழுதியிருந்தோம் அல்லவா! “ஜீவன் ஜோதி“ இயக்கத்தை நமது அனைத்து மறைமாவட்டங்களிலும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பங்குகளிலும் செயல்பட வைக்க வேண்டும். திருத்தொண்டுப்பணி மாதத்தில், நற்செய்தி

Mount St. Thomas, P.B. No. 3110, Kakkanad P.O., Kochi - 682030, Kerala, India | Tel: 0484-2428271
Email: majorarchbishop@gmail.com
Website: www.syromalabarchurch.in

அறிவிப்புத் துறையில் பணியாற்றும் பொதுநிலை மறைப்பணியாளர்களை ஒன்றுதிரட்டி "ஜீவன் ஜோதி"யின் செயல்பாடுகளைத் தொடங்குவது ஏற்றதாக இருக்கும். ஜீவன் ஜோதியை வலுப்படுத்துவதன் மூலம் திருச்சபையில் ஒரு புதிய மறைபரப்புபணி திசைநோக்கு வளரவும் வளர்க்கப்படவும் வாய்ப்பளிக்கும் என்று நம்புகிறோம்.

திருத்தொண்டுப்பணி மாத கடைபிடித்தலின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள சீரோ-மலபார் திருத்தொண்டுப்பணி அலுவலகத்திலிருந்து இந்த மாத அனுசரித்தல் பற்றிய கூடுதல் நடைமுறைச் செயல் திட்டங்களும் வழிகாட்டுதல்களும் வழங்கப்படும். அவற்றின்படி நமது திருத்தொண்டுப்பணி மாத கொண்டாட்டத்தை அனைவரின் பங்கேற்புடனும் ஒத்துழைப்புடனும் துடிப்புள்ளதாகவும் பலனுள்ளதாகவும் மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பானவர்களே, திருச்சபையின் ஆன்மாவே நற்செய்தி அறிவிப்பும் திருத்தொண்டுப்பணிச் செயல்பாடுகளும்தான். ஈசோவின் நற்செய்தியை உலகின் எல்லைகள் வரை கொண்டு சேர்ப்பது நமது கடமையாகும். பங்குகள், மறைமாவட்டங்கள், குருத்துவக்கல்லூரிகள், துறவற சமூகங்கள் மட்டுமல்ல, திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு நம்பிக்கையாளரும் தங்களின் திருத்தொண்டுப்பணி இயல்பை உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தியாவிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் நமது திருச்சபை ஆற்றி வரும் திருத்தொண்டுப்பணிகளைப் பற்றி மேலும் அறியவும், அவற்றுக்காக ஜெபிக்கவும், அவற்றில் பங்குபெறவும் உங்களை அன்போடு அழைக்கிறேன். நமது நேரத்தையும் திறமைகளையும் செல்வத்தையும் தாராளமாகப் பகிர்ந்து கொள்ளும்போது, திருச்சபையின் நற்செய்திப் பணி மேலும் வலுவானதாகவும் துடிப்புள்ளதாகவும் மாறும். இதன்மூலம் ஈசோ மெசியாவிடமிருந்து நாம் பெற்ற அன்பும் அருளும் பிறர் வாழ்வில் ஒளியாக மாறும். ஆண்டவரின் மீட்புத்திட்டத்தின் 2033-ஆம் ஆண்டின் மகா ஜூபிலிக்கு ஆயத்தமாகும் நமது திருச்சபையில், திருத்தொண்டுப்பணி மாத கடைபிடித்தல் ஒரு புதிய திருத்தொண்டுப்பணி எழுச்சிக்கு வழிகாட்டட்டும்!

தூய கன்னி மரியா, மார் தோமா, நமது திருச்சபையின் அனைத்துப் புனிதர்கள் மற்றும் அருளாளர்களின் பரிந்துரை இந்த திருத்தொண்டுப்பணிப் பயணத்தில் நமக்கு வழிகாட்டும் விளக்குகளாக இருக்கட்டும்.! உங்களுக்கு என் செபங்களும் இறையாசீர்களும். கடவுள் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

காக்கநாடு, மவுண்ட் செயிண்ட் தாமஸில் உள்ள தலைமைப் பேராயர் அலுவலகத்திலிருந்து 2026-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ஆம் தேதி அளிக்கப்பட்டது.

மார் ரா∴பேல் தட்டில்

சீரோ மலபார் சபையின் உயர்பேராயர்